பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

01 04 2024 **MONDAY** 6 30 **PM**

வணக்கம், மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்ததோடு, தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடி உரிமையை இழந்ததற்கும் அப்போதைய காங்கிரஸ்-திமுக அரசுகளே காரணம் என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
2. கச்சத்தீவை கொடுத்து, லட்சக்கணக்கான இலங்கை தமிழர்களின் வாழ்வாதார உரிமை நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது.
3. விவசாயிகளின் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
4. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யும் பணி இன்று தொடங்கியது.
5. உலக கோப்பை பளுதூக்கும் சாம்பியன் போட்டி தாய்லாந்தில் தொடங்கியது.

>>>>><<<<<

கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்ததோடு, தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடி உரிமையை இழந்ததற்கும் அப்போதைய காங்கிரஸ்-திமுக அரசுகளே காரணம் என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜெய்சங்கர், கச்சத்தீவை இலங்கைக்கு வழங்குவது தொடர்பான அனைத்து விவரங்களும் அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு தெரிவிக்கப்பட்டதாக கூறினார்.

கருணாநிதியின் ஒப்புதலின் அடிப்படையிலேயே கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசில் அப்போதைய தலைமை வழக்கறிஞரின் பரிந்துரைக்கு மாறாக கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அந்த காலகட்டத்தில் வெளியுவுத்துறை சார்பில் பெறப்பட்ட சட்ட யோசனையில், தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையையாவது நிலைநிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாக அவர் கூறினார்.

இவற்றையெல்லாம் மீறி, கச்சத்தீவு வழங்கப்பட்டதோடு, தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையும் பறிபோனதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தற்போது கைது செய்யப்படும் பிரச்சினைக்கு காங்கிரஸ் - திமுகவே காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பான அனைத்து ஆவணங்கள் வெளியாகியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு சிறு தீவை தானே வழங்குகிறோம் என்ற நோக்கில் காங்கிரஸ் - திமுக அரசுகள் செயல்பட்டதே இன்றைய சூழ்நிலைக்கு காரணம் என்றும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>><<<<<

கச்சத்தீவு விவகாரத்தை தற்போது எழுப்பியுள்ள பிஜேபி தலைமையிலான மத்திய அரசு, கடந்த பத்தாண்டுகளாக அதனை மீட்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை வினவியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் பகுதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கச்சத்தீவு ஒப்பந்தம் என்பது ஒரு ரகசிய உடன்பாடு என்று குறிப்பிட்டார்.

கச்சத்தீவை கொடுத்துவிட்டு, கடற்பகுதிகளை நாம் விரிவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கச்சத்தீவை கொடுத்து, லட்சக்கணக்கான இலங்கை தமிழர்களின் வாழ்வாதார உரிமையை அப்போதைய காங்கிரஸ் அரசு நிலைநிறுத்தியுள்ளதாகவும் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

>>>>><<<<<

அரசியல் காரணங்களுக்காக கச்சத்தீவு விவகாரத்தை பிஜேபி எழுப்பியுள்ளதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

இன்று தேனி மாவட்டம், கம்பத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திராவிட கட்சிகள் தவறிவிட்டதாகவும் திரு. சீமான் குறை கூறினார்.

>>>>><<<<<

விவசாயிகளின் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, காவிரியில் தமிழகத்திற்குரிய நீரை, கர்நாடகாவிடமிருந்து பெற்றுத்தரவும் திமுக அரசு தவறிவிட்டதாக தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யும் பணி இன்று தொடங்கியது.

வரும் 13ஆம் தேதிவரை இந்த பணி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர்கள் தாங்கள் எந்த வாக்குச்சாவடியில் வாக்களிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இந்த சீட்டுகள் வழங்கப்படுவதாக திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு. பிரதீப்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதீப்குமார் 45 செகண்ட்ஸ்)

மதுரை மாவட்டத்திலும், வாக்குச்சாவடி சீட்டுகளை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 53 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சியில் ரிசர்வ் வங்கி முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ரிசர்வ் வங்கியின் 90ஆம் ஆண்டு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் ரிசர்வ் வங்கி ஆற்றிய பணிகள், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கான தீர்மானங்கள் அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

வங்கி துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளையும் பிரதமர் பட்டியலிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ரிசர்வ் வங்கியின் 90 ஆண்டுகால சேவையை குறிக்கும் வகையிலான நினைவு நாணயத்தையும் திரு. நரேந்திர மோடி வெளியிட்டார்.

>>>>><<<<<

எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் செல்ஃபோன் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணியில் இருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த பொருட்களின் ஏற்றுமதியைப் பொறுத்தவரை, தமிழகத்தின் பங்கு 30 சதவீதமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 21 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீதம் அதிகமாகும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் முதன்மை தலைமை இயக்குநராக திருமதி. **Sheyphali Sharan** இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பதவியை வகித்து வந்த திரு. மனீஷ் தேசாய் நேற்று ஓய்வு பெற்றார்.

**>>>>><<<<<**

கோடை வெயிலின் தாக்கம் அடுத்த 3 மாதங்களுக்கு வெகுவாக அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

கோடை வெயிலின் தாக்கம் தொடர்பாக இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வெயிலின் பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த சில ஆண்டுகளாக உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை திரு. கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் திரு. கமல் கிஷோர் பேசுகையில், இதுதொடர்பாக மாநில அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

கோடை வெயிலின் பாதிப்புகளை குறைப்பதில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. கமல் கிஷோர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

<u>மாவட்டச் செய்திகள்</u>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளுக்கு தேவைப்படும் கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்களை தேர்வு செய்யும் பணிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>>><<<<<**

திருப்பத்தூர் மாவட்டத்தில் வனத்துறை சார்பில் வாக்களர் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**>>>>><<<<<**

திருச்சி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு ராட்சச பலூனை ஆட்சியர் திரு. பிரதீப்குமார் இன்று பறக்கவிட்டார்.

**>>>>><<<<<**

தருமபுரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையமான செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தை ஆட்சியர் திருமதி. சாந்தி இன்று ஆய்வு செய்தார்.

**>>>>><<<<<**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக கோப்பை பளுதூக்கும் சாம்பியன் போட்டி தாய்லாந்தில் தொடங்கியது.

இந்தியாவின் **Meerabai Chanu** மற்றும் **Bindyarani Devi** இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>><<<<<**

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Vikash Thakkar – Manush Shah** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>>><<<<<**

**Grenke** செஸ் ஓப்பன் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Arjun Erigaisi** ஏழு புள்ளிகளை பெற்றுள்ளார்.

**>>>>><u>END</u><<<<<**